செய்தி வெளியீட்டு எண்–71 நாள்–22.1.2010

# ஜே.கே.டயர் நிறுவனம் தமிழகத்தில் தொழிற்சாலையை தொடங்குவது குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஆலோசனை

* * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (22.1.2010) தலைமைச் செயலகத்தில், ஜே.கே.டயர் நிறுவனத்தின் தலைவர் ரகுபதி சிங்கானியா அவர்கள் சந்தித்து பேசினார். ஜே.கே. டயர் நிறுவனம் வாகன டயர் மற்றும் டியூப் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறது. ஜே.கே. டயரின் தொழிற்சாலைகள் இந்தியா மற்றும் மெக்சிகோவில் அமைந்துள்ளது. தற்போது, ஜே.கே டயர் நிறுவனம் முதலீட்டிற்கு தகுந்த சூழ்நிலையும், அரசின் முற்போக்கு கொள்கைகளாலும், தமிழ்நாட்டில் இத்தொழிற்சாலையினை ரூ. 1600 கோடி முதலீட்டில் சென்னைக்கு அருகே தொடங்க உத்தேசித்துள்ளது. இத்தொழிற்சாலையின் மூலம் சுமார் 1000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். இச்சந்திப்பின் போது மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜே.கே.டயர் நிறுவனத்தின் தலைவர் ரகுபதி சிங்கானியா அவர்களிடம் இத்திட்டத்திற்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று தெரிவித்தார். இக்கூட்டத்தில் தொழில் துறை செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. கே.தீனபந்து மற்றும் ஜே.கே. டயர் நிறுவனத்தின் இயக்குநர் திரு.அருண் கே.பஜாரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு– இயக்குநர், செ.ம.தொ., தலைமைச் செயலகம், சென்னை–9.